ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்.

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஷூ தை-மீ 12உ 1940 ஷூ ஜனவரி-மீ 25உ | வா-4

வாரக்குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா)

அடுத்தபடி என்ன? சென்னை அரசாங்கம் அதர்மச்சட்டத்தை அகற்ற மறுத்து விட்டது. காங்கிரஸிடம் ராஜி செய்ய பகீரதப்ரயத்நம் செய்யும் ராஜப்ரதிநிதி நமக்கு செவிசாய்க்க மாட்டார் என்பது திண்ணம் இனி என்ன செய்வதென்பது கேள்வி?

கண்ணைத்திறக்க வழியுண்டா? பற்பல காரணங்களால் இதுவரை நம் தலைவர் பட்டபாடுகள் பூர்ணபயனை அளிக்கவில்லை. தலைவர் மீதோ வைதிகர் மீதோ குறை கூற பயனில்லை. சிலர் செய்தத்யாகம் இன்னும் திவ்ரமான சிறந்த வழியில் புகல வேண்டும் நாம் ஓர் அபூர்வ வழியைக் காணுத வரை அவர் காட்டிய வழியையும் பின்பற்றுவதில் குற்றமில்லை.

நமது யோசனைகள்! பட்டதாரிகள் தமது பட்டத்தை, இச்சட்டமகலும் வரை வேண்டாமென கவர்னருக்கனுப்ப வேண்டும். ஸத்யாக்ரஹி ஒருவர் இருவராயினும் அதை ஆதரித்து அவர் செயலைப்ரசுரப்படுத்தி ஸத்யாக்ரஹத்தை துவக்கவேண்டும். தக்ககாலமவகாசமளித்து அதையும் பார்லிமெண்ட்டு வரை தெரிவித்து விட்டு வரிகொடா இயக்கத்தையுமாரம்பிக்க வேண்டும்.

அமெரிக்காவிலும் தடமாட்டம்! ஜநநாயகம் சிறந்ததென்று செல்வம் செழிக்க, விக்ஞாநம் வளர சண்டையில் கலக்காமல் பிறரை மிரட்டிக் கொண்டே கம்பீரமாக வாழ்ந்த, வாழும் அமெரிக்காவில் கூட "சர்வாதி ஆக்ஷி" வேண்டும் என்று ஓர் கக்ஷி தோற்ற அதன் தலைவர் கைது செய்யப்பட்டார். க்ஷத்ரிய ஆக்ஷி முறையே சிறந்ததென்று கூறும் காலம் விரைவிலிருக்கிறது.

சலுகையின் தீமை! ஒரு ஜாதியினர் கணக்கில் குறைவானவரென்றோ. தாழ்ந்த ஜாதியினரென்றோ, முரடரென்றோ அதர்ம வழியில் விண்சலுகை காட்டலாகாது. அப்படிக்காட்டியதால் வந்த தீமையை வெள்ளையரசாங்கமும் காங்கிரசும் நன்கு அனுபவிக்கிறது. கபுர்தாலாவில் மசூதிக்கருகே கட்டடம் கட்டக்கூடாதென மஹம்மதிய தலைவர் பட்டினி கிடக்கிறாராம்.

ஜன்மாந்தரமுண்டென சாட்சி! பாட்னாவில் ஒன்பது வயது சிறுமி ஒருவள் ஸபையில் அழகாக உபன்யாஸம் செய்கிறாள். பகவத் கீதையை தவறின்றி ஒப்புவிக்கிறாளாம்! இதற்குள் படித்து வரமுடியாது. அப்படி படித்தே வருவதாயினும் அதற்கும் ஜன்மாந்திர வாஸனை வேண்டுமல்லவா.

எச்சரிக்கை போதுமா? திருவாங்கூர் அரசாங்கம் ஹிந்துமத அவதாரங்களை மிகக்கேவலமாகக்கூறும் துண்டு பத்திரிகைகள் யாத்ரீகரிடையே கொடுக்கப்பட்டதைக் கண்டித்து எச்சரிக்கிறது! அன்யருக்கு இடங்கொடாதிருத்தல் ஹிந்து ராஜாங்க முதற்கடமை.

மேயர் மேயர்களை அழைக்கிறார்! சென்னை மேயர் கராச்சி மேயரை அழைத்து விருந்தளித்தார். பர்மா மேயரை அழைக்கிறார். செலவுக்கேற்ற பயனேதேனுமுண்டோ?

முனிஸிபாலிடிக்கு வேண்டுகோள்

குடந்தை பிள்ளையார்கோவில் தெருவிலிருக்கும் 18வீட்டுக்காரர்களும் சேர்ந்து குடந்தை முனிசிபல் கமிஷணருக்கு ஒரு மனுவை கொடுத்திருக்கிறார்கள். 828ரூ வரி செலுத்தும் தங்கள் தெருவினுடைய ஸுகாதாராதி விஷயங்கள் ஸரிவர கவனிக்கப்படவில்லை. யென்றும், உடனே தக்க ஏற்பாடு செய்யும்படியும் கேட்டிருக்கிறார்கள். ந.கி.

அனந்தப்பூர் அத்வைதஸபா

கீதா தினத்தன்று அனந்தப்பூரி. ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியார்எம். எல் எல். டி. அவர்கள் பகவத்கீதையைப் பற்றி ஓர் பிரஸங்கம் செய்தார்கள். ஞானம், கர்ம பக்தி இவைகளைப் பற்றி கீதையின் போதனையை விளக்கி வர்ணாச்ரமதர்ம தத்வங்கள் கீதையிலிருந்து வெளியாவதை குறிப்பிட்டார். இப்போது தோன்றியுள்ள எல்லா கஷ்டங்களுக்கும் கீதையில் நிவிர்த்தியிருப்பதாகக் கூறினர். பலாபேக்ஷையின்றி கர்மங்களைச் செய்பவர்களுடைய யோகக்ஷேமங்களைத் தாமே வஹிப்பதாக பகவான் கூறியுள்ளதையும் ஞாபகப்படுத்தினர்.

ஸ்ரீமான் நாகபூஷணராவ் காரு அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை கலைந்தது. (ந.கி.)

புதியபோஸ்டாபீஸ் வைக்க வேண்டுகோள்

கும்பகோணம் ஸ்ரீசங்கராசாரியர் மடத்துத் தெருவில் ஒரு பிராஞ்சு போஸ்டாபீசை ஏற்படுத்தும்படி வேண்டி ஸ்ரீமான். ஸி. எஸ் தீக்ஷிதர் முதலியவர்கள் போஸ்ட் மாஸ்டர் ஜனரல் அவர்களுக்கு ஒரு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள்.

மடத்துத் தெருவில், படித்த கனவான்கள்களும் வியாபாரிகளும், பல இன்ஸ்டிடியூஷன்களும் இருப்பதுடன், ஸ்ரீசங்கராசாரியர்மடம், ஆர்யதர்மம் ஆபீஸ், ஸிடிபாங்க், டவுன் ஹைஸ்கூல், பார்மஸி, முதலிய பற்பல பெரிய ஸ்தாபனங்களும் இந்த ரோட்டில்தான் இருக்கிறதென்றும் பெரிய போஸ்டாபீஸும், கடைத்தெரு பிராஞ்சு ஆபீஸும் வெகு தூரத்திலிருப்பதால் அஸௌகர்ய முண்டாகிறதாயும், மேலும் தபால் ஸேவகர்களிடம் கார்டுகளும், லேபில்களும் முன்போல் விலைக்குக் கிடைக்க வில்லையென்றும், புதிய தபால் ஆபீஸ் வைப்பதாயிருந்தால் ஸ்ரீ. ஸி. எஸ் தீக்ஷிதர் வீட்டை அதற்குக் கொடுப்பதாயும், பரீக்ஷார்த்தமாக பிராஞ்சு ஆபீஸ் ஏற்படுத்தி பார்க்க வேண்டுமென்றும் அந்த மகஜரில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. (ந.கி.)

குழந்தைகளுக்கு கட்டி முதலியரோகங்கள் பலவிதசெயற்கை ஆகாரத்தினல்தான்.
சிறு குழந்தைகளுக்கு தாய் பால் தான் இயற்கையான உத்தம உணவு.

पयस्या. PAYASYA [Regd.] பயஸ்யா

தாயின் பாலை மிகுதியாக வளர்க்கிறது.

கிடைக்குமிடம் :—ஆத்ரேய ஆயுர்வேத சாலா. தென்னூர் ரோடு, திருச்சினப்பள்ளி.

விலை. ¼ பவுண்டு 1—6—0.
½ பவுண்டு 2—8—0.
(Packing & Postage extra.)

திறமைவாய்ந்த எவ்வித நவீன பல் வயித்தியத்திற்கு, டாக்டர் கோஷியே.

பற்பொடிகளில் சிறந்தது கிரூஸ்லீட் பற்பொடி ஒன்றே.

கிரூஸ்லீட் பல் ஆஸ்பத்ரி, ரெயில்வேஸ்டேஷன் எதிரில், கும்பகோணம்.

ஆசாரம்

ஸ்னான விதிகள்

(ஸ்ரீ எஸ். வைதீஸ்வரய்யர் கல்கத்தா)

ஸ்நானத்திற்கு மண் அவசியம். முதலில் ஒரு ஸ்நானம் செய்து பிறகு மண் தேய்த்து முழுக வேண்டும். தலைமயிரும் தேகமும் சுத்தப்படுவது அனுபவத்தில் தெரியும். 12-வருஷங்கள் கிணற்றிலெடுத்தே ஒரு பிராம்மணன் ஸ்நானம் செய்தால் அவனுடைய ப்ராம்மண்யம் போய்விடுகிறது என்றுசாஸ்திரம். அதாவது நீர்வீழ்ச்சியாலுள்ள மின்சார சக்தி எல்லாருமறிந்தது. ஜலம் தலையிலிருந்து கால்வரை ஓடி பூமியில் சேருவதால் ஆத்ம சக்திபோய்விடுகிறது. இதற்காக இரண்டு உபாயங்கள். பெரிய நீர்நிலையில் அமிழ்ந்து ஸ்நானம்செய்வது ஒன்று வெளியேறுவதும் நீர்கழியும் சக்திக்கு. (Positive Current) மாற்றாக தலைக்குடுமியை அவிழ்த்து குனிந்து அந்த நீரைத்தரையில் விடுவது (Negative). உடனே இடுப்பு வஸ்திரத்தையும் அப்படியே பிழிவதால் காலால் இறங்கும் நீர் தடைப்படுகிறது. உடனே காய்ந்த துண்டால் தலை உடம்பையும் வேறு துண்டால் இடுப்புக்குக் கீழும் துடைக்கவேண்டும். பிறகு மடி வஸ்திரம் தரிக்கவேண்டும். இடுப்பு வஸ்திரத்தை மேலுக்கும் மேல்வஸ்திரத்தை இடுப்புக்கும் சிறிது நேரங்கூட மாற்றி உபயோகிக்கக் கூடாது. இவை சுகாதாரத்தைப் பொறுத்தவை. இடுப்பு வஸ்திரத்தை கச்சமாக இரு துடையிலும் படாவிருக்கும்படி தரிப்பதவச்யம். காம உணர்ச்சி[illegible]சிறிது தடுக்குமுபாயம் இது. நிர்வாணமாக ஸ்நானம் செய்யக்கூடாது. வேறு உணர்ச்சிகளுக்கு இடமுண்டாகி தேகச்சூடு குறையாமலும் ஆத்ம சக்தி குறைந்தும் போகும். குளிர்ந்த நீரே நன்மை தரும். வெந்நீர் தளர்ச்சியும் சோம்பலும் உண்டாக்கும். அதிகாலையில் மூன்று வருஷங்கள் தினம் தவறாமல் ஸ்நானம் செய்தால் வியாதியற்ற வாழ்வும் உண்டு என்று சாஸ்திரம்.

ஆத்ம சக்தி என்று அடிக்கடி எல்லாவற்றிற்கும் சொல்வது சிலருக்கு வேடிக்கையாயிருக்கும். சிலர் முகங்கள் அழகாயும், சில கோரமாயும், சில வசீகரிப்பதாயும், சில அருவருக்கத்தக்கதாயும் இருப்பதைப்பார்க்கிறோம். லக்ஷிமிக்களை என்கிறோம். அழுமூஞ்சி என்கிறோம். தேகத்திலும் மனதிலும் உள்ள அசுத்தங்களே வித்யாஸங்களுக்குக்காரணம். சுத்தத்தால் கண்களுக்குப்ரகாசமுண்டாகிறது. கண்களில் ப்ரகாசமிருந்தால் மாணிக்கம் குப்பையிலிருந்தாலும் நம்மனதை தன்னிடமே கவர்வது போல ஆத்ம சக்தி கவர்கிறது.

ஸ்தாவர ஜங்கமங்கள் எல்லாம் ஈச்வர ஸொத்து. அதாவது கடவுள் வியாபித்திராத சிருஷ்டி ஒன்றும் இல்லை. சுயநலத்திற்காக நாம் எதை ஆச்ரயித்தாலும் நன்றியைக்காட்டும் அறிகுறியாக வணக்கத்துடனும் ஈச்வர சிந்தனையுடனும் ஆச்ரயித்தால் ஹிம்ஸை என்பது ஒட்டாது. (அஹிம்ஸையே தர்ம ஸூக்ஷ்மம்). ஆகையால் சௌசத்திற்கு வேண்டிய மண், ஜலம், பல்குச்சி இவை எடுக்கும்போது வணக்கமும் தியானமும் அவசியம். ஸ்நானம் செய்வதற்கு முன் நீரால் நாம் அடையும் பிரயோஜனங்களை எண்ணி வணங்க வேண்டும். நதியில் இறங்கு முன் கரையிலிருந்து தீர்த்தத்தை தலையில் தெளித்துக் கொள்ளவேண்டும். இதுவும் ஆசமனமும் சிறிது சூட்டையும் தணிக்கின்றன.

ஆசமன விதி

காலையில் துங்கி எழுந்தவுடனும், மலஜலம் கழித்த பிறகும், பல் தேய்த்த பிறகும், ஸ்நானம் செய்யுமுன்னும் பிறகும், வஸ்திரம் தரித்த பிறகும், கை கால்களைக் கழுவி ஆசமனம் செய்யவேண்டும். சிறிதாயுள்ள மழைத் துளிகளால் ஆறு குளங்கள் நிரம்புவது போல அர்த்தமில்லாதது போல் தோன்றும் சிறு கார்யங்களால் மனுஷ்யனுக்கு இன்றியமையாத சித்த சுத்தத்திற்கு வழி ஏற்படுகிறது. ஆசமனம் என்பது சிறிது நீரை மூன்று தடவை உட்கொண்டு கண், மூக்கு, காது ஆகிய இந்திரியத்வாரங்களையும், தலை, பாதம், ஹ்ருதயம் ஆகிய அடி முடி நடுஸ்தானங்களையும் நீரில் தோய்ந்த விரல்களால் தொடுவது. இது இந்திரியங்களை விளக்கி ஊக்கமளிக்கிறது. மூர்ச்சையைத் தெளிவிக்கச் செய்யும் உபாயத்தில் இது ஒரு சிறு பாகம் என்றால் எல்லாரும் அறியக்கூடும். இம்மாதிரி மகம்மதியர்களும் செய்வதை பார்த்திருக்கலாம்.

காமக்ரோதங்கள் ஜனித்தபொழுதும், தும்மல் கொட்டாவிக்கும், கண் காதுமூக்கு மலங்களை எடுத்த பிறகும், கீழ் அவயவங்கள் கச்சம் குடுமி இவைகளைத் தொட்டாலும், நீர் முதல் அன்னம் வரையில் உட்கொள்ளும் முன்னும் பிறகும், பாடங்கள் வைதீக (வேத ஸம்பந்தமான என்று அர்த்தம்) கர்மங்கள் துவக்கத்திலும் முடிவிலும், சுத்தமாயிருந்து ஆசமனம் செய்ய வேண்டும். வடக்கு அல்லது கிழக்கு முகமாய் உட்கார்ந்து முழங்கால்களுக்குள் கை வைத்துப் பேசாமல் ஆசமனம் செய்யவேண்டும். தெற்கு மேற்கு முகமாய் செய்தால் அந்த அசுத்தம் தீர ஸ்நானம் செய்யவேண்டுமென்றிருப்பதால் ஆசமனத்தின் ஆத்ம சக்தி அறியலாகும். அனுபவத்தில் நன்மை விளங்கும். தெற்கு த்ருவ பாதை, மேற்கு ஸூர்ய பாதை வெயிலில் உயர்த்தப்பட்ட வஸ்திரம் (Suerilized) வியாதியற்றது. தினந்தோறும் வேறு வஸ்த்திரம் தரிக்க வேண்டும். சட்டை உருப்புகள் ஒரு வேளைக்கு மேல் உபயோகப் படுத்துவதால் வியாதிக்குக் காரணமாகிறது. நம்முடைய அழுக்குடன் டிராம், பஸ், வண்டி, ரயில், நாற்காலி, கடிதம், பிறர்மேல் படுவது, எச்சில், துப்பல், முதலான அழுக்குகளும் சேருகின்றன. ஆகையால் சட்டையோடு எப்போது மிருப்பதும் ஆசமனமும் பயனற்றது. உதட்டின் மயிரில்லாத பாகத்தில் விரல் பட்டாலும் சுத்தம் செய்யவேண்டும்.

ஆகையால் எச்சில் செய்வது கூடவே கூடாது. முத்தம் கொடுப்பது நவநாகரீகமெனினும் மேல் நாட்டிற்கூட கண்டிக்கப் படுகிறது. உச்சிமுகருவது உடம்பைத் தடவிக்கொடுப்பது இவை முன்னோர் ஆசரித்த ஆசைக்குறி. நதியிலோ, வீதியிலோ, சுத்தமான அல்லது மிகவும் அசுத்தமான இடத்திலோ துப்பக் கூடாது. வலது புறம் துப்பக் கூடாது(Keep to the left) என்பது போல் வலது புறம் யாராவது வரக்கூடும் காரி உமிழ்வது கூடாது. கைக்குட்டையில் மூக்கைச் சிந்தி வைத்துக் கொள்ளக் கூடாது.

காலஞ்சென்ற என் எஜமானன் தகப்பனார் ராவ்பகதூர் ஹேமசந்திர கார் என்றவர் மாஜிஸ்டிரேட் உத்யோகம் செய்தவர். அவருடைய பத்னி ஆசாரசீலை. கோர்ட்டிலிருந்து வந்ததும் ஸ்நானம் செய்து மடி தரிப்பதுடன் சமையலறை வந்ததும் பத்னி கையால் கோமய ஸ்நானம் செய்யவேண்டும். இது நாற்பது வருஷங்களுக்கு முந்திய கதை! என் எஜமானனே வெள்ளைக்கார ஆசாரந்தான். (தொடரும்)

ஸ்ரீ வாஞ்சியூர் சிவாலய திருப்பணி

ஸ்ரீ அகண்ட சச்சிதானந்த சர்வ வியாபக பரிபூர்ண ஸ்வரூபமான பரமசிவன் ஆன்ம கோடிகள் அனைவரும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைந்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு தனது அவ்யாஜ கருணையினால் திருக்கோயில் கொண்டெழுந்திருக்கும் பல சிவஸ்தலங்களில் ஒன்றாகியும், பொன் விளையும் பூமியென புகழ்பெற்ற சோழவள நாட்டில் மூவர் பாடல் பெற்ற சிவராஜதானி (நாகப்பட்டிணம்) என்ற க்ஷேத்திரத்தின் வடக்குத் திக்கில் புந்நாகவனம் (நாகூர்) என்ற புண்ணிய பூமியின் அருகாமையில் உள்ளதும், தஞ்சை மகாராஜா அவர்களால் சர்வமான்யமளிக்கப்பட்டு ஸ்ரீ இனம் வாஞ்சியூர் கோவில் பத்து கிராமமென்ற பெயருடன் உள்ளதும் ஸ்ரீ வாராணசி ஸ்ரீ வாஞ்சியூர் இரண்டு ஸ்தலங்களில் மட்டும் உற்பத்தியாகும் திவ்ய குசம் (தர்ப்பை) என்னும் ஸ்தல மூலிகையுடையதும், பிரதி வருஷ கிர்த்திகா மாஸ பானு வாரங்களிலும் ஸ்ரீ விஸ்வநாதஸ்வாமியின் சந்நிதானத்திலுள்ள புஷ்கரணியில் ஸ்நானம் செய்பவர்களுக்கு வாராணசியிலுள்ள மணிகர்ணிகா கட்ட ஸ்நான பலன் உண்டாவதான ஐதீகமுடைய தீர்த்த விசேஷத்தால் காசிக்கு வீசம் அதிகமெனச் சொல்லி பல யாத்திரிகர்கள் பிரதி வருஷ கார்த்திகை மாத பானு வாரத்தில் வந்து தீர்த்த மாடி பலன் பெற்று வருவதும், ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீமத் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசார்யாள் ஸ்வாமிகள் அவர்களின் ஆதீனத்திற்குள்பட்டதுமான ஸ்ரீ வாஞ்சியூர் என்ற க்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீ விசாலாக்ஷி சமேத ஸ்ரீ விஸ்வநாதஸ்வாமி ஆலயத்தை புதுப்பித்து ஸர்வ பரிவார தேவதைகள் உள்பட அம்பாள் ஸ்வாமி இவர்களுக்கு மஹா கும்பாபிஷேகமும் நடத்திவைத்து அம்மூர்த்திகளை தரிசிக்கும் தனது சிஷ்ய கோடிகளுக்கு ஐஹீக ஆமுஷ்கிக பலன்கள் உண்டாகும்படி பரம கருணை கொண்டு ஆசார்யாளவர்கள் அனுக்கிரகித்திருப்பதால் அதையனுசரித்து ஷை ஆலய திருப்பணியும் 14—12—39உ குருவார முதல் ஆரம்பமாகி நடந்து வருவதால் ஆஸ்திக சிவபக்த சிரோன்மணிகளான ஆசார்ய சிஷ்யர்களனைவரும் இந்த ஈசுவர கைங்கிரியத்தில் சந்தோஷத்துடன் ஈடுபட்டு நமது பரமாசார்யாளின் பரமமான அருள் பிரசாதத்துக்கு பாத்திர பூதாளாக வேணும்.

(ந.கி.)

Books by Mr. S. Aiyadurai Iyer.

	R.	A.	P.
Advaida Siddhantham	0	8	0
Ramayana as an illustration of Yoga Sastra	0	8	0
Bharatham & Bhagavatham in the light of Yoga Sastra	0	4	0
பொதுமத போதினி	0	4	0

புதுக்கோட்டை மஹாராஜ காலேஜி லெச்சரர், ஸ்ரீ A. ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் பிரசுரங்கள்.

ஸ்ரீ சூக்தபாஷ்யம்	1	8	0
பதினேரு சில்லரை ரஹஸ்யங்கள் ஸாரஸாரம் பரமபத சோபனம் முதலியன இரண்டு செட்டுகள்	2	12	0
அதிகரண ரத்தினமாலை	3	0	0
பரமபத ஸோபானம்	0	6	0
ஸ்ரீலக்ஷிமீ ந்ருஸிம்ம ஸ்தவம்			
,, ,, I பாகம்	0	4	0
,, ,, II பாகம்	0	3	0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிர்ண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்

உ

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

மூகபஞ்சசதீ.

(முன் தொடர்ச்சி.)

மந்தஸ்மித சதகம்.

96 ஸந்தாபம் விரளீகரோது ஸகலம் காமாக்ஷி! மச்
சேதஞ மஜ்ஜந்தீ மதுரஸ்மிதாமரதுனீ கல்லோல
ஜாலேஷு தே |
நைரந்தர்ய முபேத்ய மன்மத மருல்லோலேஷு
யேஷு ஸ்புடம் ப்ரேமேந்து: ப்ரதிபிம்பிதோ
விதநுதே கௌதூஹலம் தூர்ஜடே: |

காமாக்ஷி - காமாக்ஷியே, நைரந்தர்ய முபேத்ய - இடைவிடாத, நிலைமையை அடைந்து. மன்மத மருல்லோலேஷு - மன்மதனென்னும் காற்றால் அசைந்து கொண்டிருக்கிற, யேஷு - எந்த அலைகளில், தூர்ஜடே: - பரமசிவனுடைய, ப்ரேமேந்து: - அன்பு என்னும் சந்திரன், ஸ்புடம் - நன்றாக, ப்ரதிபிம்பித: - பிரதிபலித்துக்கொண்டு, கௌதூஹலம் - உத்ஸாஹத்தை, விதநுதே - செய்து வருகிறதோ, (தேஷு - அப்படிப்பட்ட) தே - உனது, மதுரஸ்மிதாமரதுனீகல்லோல ஜாலேஷு - புன்சிரிப்பென்கிற தேவ கங்கையின் அலை ஸமூஹத்தில், மஜ்ஜந்தீ - முழுகின்றதான, மச்சேதநா - எனது மனதானது, ஸகலம் - எல்லாவிதமான, ஸந்தாபம், தாபத்தையும் - விரளீகரோது - போக்கடிக்கட்டும்,

97. சேத: க்ஷீரபயோதி மந்தன சலத் ராகாக்ய
மந்தா சல க்ஷோபவ்யாப்ருதி ஸம்பவாம்
ஜநநி ! தே மந்தஸ்மித ஸ்ரீஸுதாம் |
ஸ்வாதம் ஸ்வாதமுதீத கௌதுகாரஸம்
நேத்ர த்ரயீ சாங்கரீ ஸ்ரீகாமாக்ஷி! நிரந்தரம்
பரிணமத்யானந்த வீசீமயீ ||

ஜநநி! காமாக்ஷி! தயான காமாக்ஷியே, சேத: க்ஷீரபயோதி மந்தன சலத்ராகாத்ய மந்தாசல க்ஷோபவ்யாப்ருதி ஸம்பவாம் - மனதென்றும் க்ஷீரஸமுத்ரத்தைக் கடையும், அநுராக மென்கிற மந்திர பர்வத்தின் அசைவினால் ஏற்பட்ட. தே - உனது - மந்தஸ்மித ஸ்ரீஸுதாம் - புன்சிரிப்பின் காந்தியாகிற அம்ருதத்தை, உதீத கௌதுகரஸம் - அதிக உத்ஸாஹரஸத்துடன் இருக்கும் படி. ஸ்வாதம் ஸ்வாதம் - அடிக்கடி சாப்பிட்டு. சாங்கரீ - பரமசிவனுடையதான. நேத்ரத்ரயீ - மூன்று கண்களும். நிரந்தரம். இடை விடாமல் - ஆனந்த வீசிமயீ - ஆனந்த அலையாக பரிணமதி - பரிணமிக்கிறது.

98 ஆலோகே தவ பஞ்சஸாயகரிபோ: உத்தாம
கௌதூஹல |
ப்ரேங்கந்மாருத கட்டனப்ரசலிதாதானந்த துக்
தாம்புதே: |
காசித் வீசிருதஞ்சதி ப்ரதிநவா ஸம்வித்ப்ரரோ
ஹாத்மகா |
தாம் காமாக்ஷி ! கவீச்வரா: ஸ்மிதமிதி வ்யாகுர்
வதே ஸர்வதா ||

காமாக்ஷி! காமாக்ஷியே, பஞ்சஸாயகரிபோ: - மன்மத சத்ருவான பரமசிவனுடைய, ஆலோகே - பார்வை ஏற்படும் போது, உத்தாமகௌதூஹலப்ரேங்கன்மாருதகட்டனப்ரசலிதாத் - அதிக உத்ஸாஹமென்கிற காற்றின் மோதலால் அசைந்துகொண்டிருக்கிற, ஆனந்ததுக்தாம்புதே: - ஆனந்தமென்கிற க்ஷீரஸமுத்ரத்திலிருந்து, ஸம்வித்ப்ரரோஹாத்மகா - ஞானத்தின் அங்குரமாகிற, ப்ரதிநவா - புதியதான, காசித் - ஒரு, வீசி: - அலையானது உதஞ்சதி - உண்டாகிறது, தாம் - அந்த அலையை, கவீச்வரா: - கவிச்ரேஷ்டர்கள், ஸ்மிதமிதி - புன்சிரிப்பென்று, ஸர்வதா - எப்போதும், வ்யாகுர்வதே - விவரிக்கிறார்கள்.

99 ஸூக்தி: சீலயதே கிமத்ரி தநயே! மந்தஸ்மி
தாத் தே முஹு: |
மாதுர்யாகம ஸம்ப்ரதாயமதவா ஸூக்தேஸ்து
மந்தஸ்மிதம் |
இத்தம் காமபி காஹதே மம மன: ஸந்தேஹ
மார்க்கப்ரமீம் |
ஸ்ரீ காமாக்ஷி ந பாரமார்த்யஸரணி ஸ்பூர்த்தௌ
நிதத்தே பதம் ||

அத்ரிதநயே! பர்வதபுத்ரியான ஸ்ரீகாமாக்ஷி! காமாக்ஷியே தே - உன்னுடைய, ஸூக்தி: - நல்லவாக்கானது, மாதுர்யாகமஸம்ப்ரதாயம் - இனிமை உண்டாக்கும் வழியை, மந்தஸ்மிதாத் - உனது புன்சிரிப்பிடமிருந்து, முஹு: - அடிக்கடி, சீலயதேகிம் - பழக்கிக்கொள்ளுகிறதா? அதவா - இல்லாவிடில், ஸூக்தே: - நல்லவாக்கிடமிருந்து, மந்தஸ்மிதம் - புன்சிரிப்பானது அதை பழக்கிக்கொள்கிறதா? இத்தம் - இம்மாதிரி, மம மன: - எனது மனதானது, காமபி - ஒருவிதமான, ஸந்தேஹமார்க்கப்ரமீம் - ஸந்தேஹவழிக்கு குழப்பத்தை, காஹதே-அடைகிறது, பாரமார்த்ய ஸரணிஸ்பூர்த்தௌ - நிஜமானவழியை அடைவதில் பதம்-அடியை, ந நிதத்தே - வைக்கிறதில்லை.

100 க்ரீடாலோலக்ருபா ஸரோருஹமுகீ ஸௌதாங்
கணேப்ய:
கவிச்ரேணீ வாக்பரிபாடிகாம்ருதஜரீ ஸூதீ
க்ருஹேப்ய: சிவே! |
நிர்வாணங்குர ஸார்வபௌமபதவீ ஸிம்ஹாஸ
னேப்யஸ்தவ
ஸ்ரீ காமாக்ஷி! மனோஜ்ஞமந்தஹஸிதஜ்யோதிஷ்
கணேப்யோ நம: ||

சிவே! மங்களமூர்த்தியான ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, க்ரீடாலோல - விளையாட்டில் ஆசையுள்ள, க்ருபா - கருணையென்கிற, ஸரோருஹமுகீ - ஸ்திரீயினுடைய, ஸௌதாங்கணேப்ய: - உப்பரிகைகளையும், கவிச்ரேணீ - கவிகளுடைய கூட்டத்தின், வாக்பரிபாடிகா - வாக்குஸாமர்த்யமென்கிற, அமிர்தஜரீ - அம்ருதப்பெருக்குக்கு, ஸூதீக்ருஹேப்ய: - உத்பத்திஸ்தானங்களாயும், நிர்வாணங்குர - மோக்ஷஆரம்பமாகிற, ஸார்வபௌமபதவீ - ஸாம்ராஜ்யவழியின், ஸிம்ஹாஸனேப்ய: - ஸிம்ஹாஸனங்கள் போன்றவைகளுமான, தவ - உனது, மனோஞ்ஜமந்தஹஸிதஜ்யோதிஷ்கணேப்ய: - அழகிய மந்தஸ்மித ஒளியின் திவலைகளுக்கு நம: - நமஸ்காரம்.

இமாம் பஞ்சசதீம் யஸ்து
நித்யம் பக்தியுத: படேத் |
ஸ்ரீ காமாக்ஷீ பவேத் தஸ்ய
ப்ரஸந்நா ச வரப்ரதா ||

இந்த பஞ்சசதியை எவர் நித்யம் பக்தியுடன் படிக்கிறாரோ அவருக்கு ஸ்ரீ காமாக்ஷீ தேவியானவள் பிரஸன்னையாகி வரங்களையும் கொடுப்பாள்.

ஸ்ரீ காஞ்சீ நகரீ காமகோடி
பீடாதிப: ப்ரபு: |
ஜீயாத் ஜகத்குரு: வைஷ:
ஸ்ரீ மூகேந்த்ரஸரஸ்வதீ ||

ஸ்ரீ காஞ்சிநகர காமகோடி பீடாதிபதியும் பிரபுவும், ஜகத்குருவுமான அந்த ஸ்ரீ மூகேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள், ஸர்வோத்க்ருஷ்டராக விளங்கவேண்டும்.

மந்தஸ்மித சதகம்
முற்றிற்று.
சுபம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-௵ தை-௴ 12௳

காந்தீயத்தை வளரவிடுவதா?

காந்தீய காங்கிரஸ் வாதிகள் மீண்டும் மந்திரி உத்யோகத்தை ஏற்க முன் வரப் போவதான பிரஸ்தாபம் காங்கிரஸ் கோஷ்டியில் சில தினங்களாக ஆடிக்கொண்டிருக்கிறது. பத்திரிகைகளில் இதற்கேற்ற சின்னங்கள் மறைமுகமாக அறியக் கிடக்கின்றன. ராஜப்பிரதிநிதியின் பம்பாய் பிரசங்கத்திற்கு காந்தீயர்கள் விரிவான அர்த்தம் கொண்டு இணக்கம் காட்ட முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீமான் பாலகங்காதர கெர், ஸ்ரீ புலாபாய் தேசாய் முதலிய பம்பாய்த் தலைவர்கள் ராஜப்பிரதிநிதியை ஸந்தித்துவிட்டு, காந்திஜீயையும் பார்த்துப் பேசினார்கள். மதுரை முதலியவிடங்களுக்குப் போகவிருந்த ஸ்ரீ ஸி. ஆர். அதை விட்டு வார்தாவுக்கு விரைந்தோடியிருக்கிறார். காங்கிரஸ் கார்யக் கமிட்டியும் காந்திஜீக்கு ஸர்வாதிகாரம் அளித்து வைஸ்ராயைக் கண்டு பேச அனுமதி கொடுத்திருக்கிறது. டெல்லி பம்பாய் பத்திரிகை நிருபர்களும் வேண்டியளவு தங்களது கயிர் திரிப்பு வேலையை ஸாமர்த்யமாக நடத்தி வருகிறார்கள். ஏற்கனவே, சிறுபான்மை ஸமூஹ விஷயமாக ஜின்னாவுக்குப் பரிந்து பேசிய "லண்டன் டைம்ஸ்" பத்திரிகை கூட சில தினங்களுக்கு முன் தலை கீழாக மாறி ஜின்னாவைத் தாக்க முற்பட்டிருக்கிறது. இதிலிருந்து காற்று எந்த பக்கம் வீச ஆரம்பிக்குமென்பதும் ஸூசிப்பிக்கப்படவில்லையா? ஆதலால் திரைமறைவில் ஏதோ தீவ்ரமான வேலை நடக்கிறதென்பது ஸந்தேஹமின்றி வெளியாகிறது.

இதன் பயனாக, மத்ய கவர்ன்மெண்டில் காங்கிரஸுக்கும், லீகுக்கும் ஒரு ஸ்தானம் ஏற்படுத்தி, மாகாணங்களிலும் மீண்டும் மந்திரியாக்ஷி சில தினங்களில் ஏற்பட்டால் எவரும் அதிசயப்படுவதிற்கில்லை.

ஆனால் இந்த ஸமயம் இந்தியாவிலுள்ள எல்லா ஸமூஹ, மதத்தலைவர்களும் சிந்திக்க வேண்டிய விஷயம் முக்யமாகவுளது. முற்றிலும் ராஜீய நோக்கத்துடன் மட்டும் காந்தீய காங்கிரஸ் வாதிகள் மந்திரிகளாயிருப்பதில் எவருக்கும் ஆக்ஷேபமிருக்க நியாயமில்லை. ராஜியத்தில் மத ஸமூஹ விஷயங்களைக் கலக்கக்கூடாதென்றகொள்கையானது பிரபலராஜியவாதிகளால் வற்புறுத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறோம்:

ஆயினும் காந்தீயர்களுக்கு இந்த உயர்ந்த கொள்கை பிடிக்கவில்லை. காந்திஜியும் அவரது சீடர்களும் ராஜீயத்தில் செல்வாக்குப் பெற்று அதன் பலத்தைக்கொண்டு புதிய காந்தீய மதத்தை சட்ட நிர்பந்தமூலமாக ஜனங்கள்மீது திணிப்பதையே முக்ய நோக்கமாகக்கொண்டு வேலைசெய்கிறார்கள். வேதநாசம், ஜாதி தர்ம, குல தர்ம நாசம், வர்ணாச்ரம நாசம்,வ்யவஸ்தா நாசம் போன்ற நாசவேலையையே காந்திஜீயும் அவர் கூட்டத்தாரும் தங்கள் உள்நோக்கமாகக் கொண்டிருப்பது பிரஸித்தமல்லவா?

காந்தியின் போக்கை ஆதி முதல் கவனித்து வந்தவர்களுக்கு இது ஸுலபமாகவிளங்கும். காந்திஜி பொது வாழ்வில் புகுந்தது முதல் அவர் ஸமூஹச்சீர்திருத்த வேலையையே முக்ய நோக்கமாகக் கொண்டு வேலை செய்து வருவது ஸ்பஷ்டமான விஷயம். ராஜீயத்தில் அவர் உத்ஸாஹம் காட்டியவரல்ல. தமது விருப்பப்படி ஒரு வித ஸமூஹப்புரட்சியை உண்டுபண்ணுவதற்கு ஸந்தர்ப்பத்தை அவர் எதிர்பார்த்திருந்தார். ரௌலட் சட்டக் கிளர்ச்சி பலமாக இருந்தபோது அதைக் கண்டிப்பதன் மூலமாக ராஜீயத்தில் புகுந்தார். வெள்ளைக்கார அதிகார வர்க்கத்தைத் தாக்கிப் பேசுவதின் மூலமாக தீவ்ர ராஜீய வாதிகளின் மதிப்பைப் பெற்றார். அப்போது தமது உள்நோக்கமாகிய ஸமூகபுரட்சிக்கொள்கையை மறைவாக வைத்துக் கொண்டார். இவர் வெள்ளைக்காரர்களை வன்மையாகக் கண்டிப்பது கண்டு, அந்த லாபத்தைப் பெற வேண்டி, இவருடைய ஸமூஹத்திருத்த வேலைகளுக்கும் பொது ஜனங்கள் அச்ரத்தையுடன் தலையாட்டி வந்தனர். பிறகு ராஜீயத்தில் தமக்கு பலமான பிடிப்பும், தேச ஆதரவும் அசைக்கக்கூடாத அளவு ஏற்பட்டவுடனேயே தமது ஸமூஹப்புரட்சி வேலையை பஹிரங்கமாக ஆரம்பித்து, தீண்டாமை விலக்கு, ஆலயப்பிரவேசம் ஆகிய வேலைகளை ராஜீயத்திலும் புகுத்தி விட்டார். இன்றைக்கும் அவருக்கு ராஜீய வேலை பிரதானமற்றதாயும்,தம் இஷ்டப்படியான ஸமூஹத்திருத்தமே முக்யமாயுமிருந்து வருவது ஸ்பஷ்டமானது.

ஆதிமுதல் அவர் செய்து வந்துள்ள வேலைகளையும் அவரது வியாஸங்களையும் கவனித்துவந்தவர்களுக்கு இதில் ஸந்தேஹமிருக்க நியாயமில்லை. காந்தி சிஷ்யர்களே அவரை புத்தரென்றும், ஏசுநாதரென்றும், ஸமூஹ க்ஷேமத்திற்காக அவதரித்த தெய்வாம்சமென்றும் கொண்டாடுகிறார்களே யல்லது பிரபல ராஜீயவாதியென்று புகழக்காணோம். ஜனமதிப்பைபெற வேண்டி காந்திஜியும் தாம் உலக அதீத மனிதரென்பதைக்காட்டிக்கொள்ள சில நடவடிக்கைகளை வைத்துக் கொண்டு அதன் மூலம் ஜனங்களின் பிடிப்பை வலுப்படுத்த வழிதேடிக் கொண்டிருக்கிறார். ஆகவே அவர் ஸமூஹப்புரட்சிவேலைகளைச் செய்வதற்காகவே தமது சீடர்களை சட்டஸபைக்கு அனுப்பியும், மந்திரி பதவி வஹிக்க ஏவியும்வருகிறாரென்பதும் சென்ற சிலமாதங்களாக வெளிப்பட்டு விட்டது. மந்திரிகளின் ராஜிநாமா மூலம் காந்திய மதத்திற்குசட்டமூலமான பலம் ஏற்படுவது தடைப்பட்டிருக்கிறதல்லவா?

இந்தத்தடையை நிவர்த்தி செய்துகொள்ளவே காந்திஜி கவலைப்பட்டுக்கொண்டிருப்பதால் இப்போது வைஸ்ராயுடன் எவ்விதமாவது ராஜி செய்து கொண்டு மீண்டும் தமது சிஷ்யர்களை மந்திரியாக்க அவர் முனைந்திருப்பதாக தெரிகிறது. மந்திரியாக்ஷி மூலம் காந்தீயத்திற்கு பலம் ஏற்பட்டுவிட்டால், இந்தியாவில் ஹிந்து மதமோ, கிறிஸ்தவ மஹம்மதியாதி மதங்களோ உருப்படியாக நிற்கப்போவதில்லை. மதாசாரியர்களுக்கும் அந்தந்த மதங்கள் மீது செல்வாக்கு நசித்துவிடும். எல்லோருக்கும் காந்திஜியே சட்டாம்பிள்ளையாக விளங்கி எல்லா மதத்தையும் தமது இஷ்டப்படி சட்ட பலத்தால் ஆட்டிவைக்க விரும்புவார். தற்போது காங்கிரஸானது ஒரு ஸமூஹத் திருத்த ஸபையாக மாறி விட்டதென்பதை காங்கிரஸ் வாதிகளே கண்டிக்கிறார்களல்லவா? ஆகவே காங்கிரஸ் மந்திரியாக்ஷி மறுபடியும் ஏற்படுவதில் மேற்படி காந்தீய ஆபத்து பலமாயிருப்பதை எல்லா ஸமூஹமதத் தலைவர்களும் கவனிப்பது நலம்.

எப்படி முடியுமோ?

ஸமீபத்தில் சுக்கூரில் நிகழ்ந்தது தெரியும் ஒரே வாரத்தில் 155 ஹிந்துக்கள் கொல்லப்பட்டனர். 20 கோடி ரூபாய் பொருமானமுள்ள சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன. 40 கிராமங்கள் சூறையாடப்பட்டன. ஸிந்து மாகாணத்தில், வடமேற்கு பிராந்திய மாகாணத்தில் ஹிந்துக்கள் ஒரு இரவும் பயமின்றி கழிக்க முடியவில்லை. "திகில் கொண்ட வாழ்வு. இரவையே நாங்கள் அறிந்திலோம். இரவையும் பகலாகவே நாங்கள் கண்கொட்டாமல் கார்க்க வேண்டியிருக்கிறது," என்று என் நண்பர் எழுதியுள்ளார். ஸிந்து மாகாண பிரதம மந்திரி தன் ஸர்க்காரால் ஹிந்து கிராமத்திலுள்ள ஜனங்களின் உயிரையும் பொருளையும் கார்க்க முடியாது என்று கூறிவிட்டு அவர்களை தங்கள் வீடுவாசல்களை விட்டுவிட்டுப் போய்விடும்படி உபதேசித்துவிட்டார். காந்திஜீயும் இதே உபதேசம் தான் செய்கிறார். ஸிந்து மாகாணத்திலும், வடமேற்கு பிராந்திய மாகாணத்திலும் உள்ள ஹிந்துக்களை அவ்விடம் விட்டு வெளியேவிட உபதேசிக்கிறார். பஞ்சாபிலும் வங்காளத்திலும் இதேகதிதான் நேர இருக்கிறது இன்னும் சில நாட்களில். ஜாக்ரதை!

பாய் பரமானந்தர்.

ராதா கல்யாண மஹோத்ஸவம்

கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியர் ஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் ஸ்ரீமத் ஆசார்யாளின் அநுக்ரஹத்தை முன்னிட்டு நாளது தை௴ 15௳ ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவமானது பிரம்மஸ்ரீ சுப்பு ஸ்வாமிகள் அவர்களைக்கொண்டு நடைபெறும். வழக்கம்போல் பிராம்மண ஸந்தர்ப்பணம் நாம ஸங்கீர்த்தனம் ஸத் கதா கால க்ஷேபம் முதலியவைகளும் நடைபெறும்.

எஸ். கோபாலன்.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B.A., B.L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை அணா 8] [தபால் சிலவு வேறு.

"கடாக்ஷ சதகம்" (2ம் பாகம்)
விலை அணா 8] [தபால் சிலவு வேறு.

கிடைக்குமிடம்;—ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

வர்ணாச்ரம தர்ம, ஆலய ஸம்ரக்ஷண விசேஷ மஹாநாடு.

கோட்டையூர்.

20—1—40 சனிக்கிழமை காலை 8-50க்கு கோட்டையூர் பிள்ளையார் கோவிலிலிருந்து மேளதாளம் முழங்க, தொண்டர் குழாம் சூழ, ஆஸ்திகர்கள் பலர் புடைசூழ்ந்துவர வரவேற்புக் கழகத் தலைவர் ஸ்ரீமான் க. வி. சொ. வி. அழகப்ப செட்டியார், கொடியேற்று விழாத் தலைவர் காரைக்குடி ஸ்ரீ மெ. செ. ச. சிதம்பரஞ் செட்டியார், மஹாநாட்டுத் தலைவர் தேவகோட்டை ஸ்ரீ கரு. கி. சொர்ணநாதன் செட்டியார், திறப்புவிழாத் தலைவர் தேவகோட்டை ஸ்ரீ அழ. சுப. பழ. சுப்பிரமணியஞ் செட்டியார், அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர் மதுரை ராவ்சாகேப் என். நடேசய்யர், மதுரை சபை உபதலைவர் ஸ்ரீ என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் முதலானோர்களை ஊர்வலமாக அழைத்து இறுதியில் யோகநாத புரத்தில் திவ்யமாக அலங்கரிக்கப்பட்டுள்ள மஹாநாட்டுக் கொட்டகையில் ஊர்வலம் வந்து நின்றது. மஹாநாடு முறைப்படி சிம்மக் கொடியேற்றியபின், வரவேற்புப் பிரசங்கம், திறப்பாளர் பிரசங்கம், தலைவர் பிரசங்கம் முதலானவைகள் நடைபெற்றன. ஆயிரக்கணக்கில் ஆர்வத்துடன் மக்கள் குழுமியிருந்தனர். மதுரையிலிருந்து அநேக ஸ்திரீகளும் வந்திருந்தனர்.

பிற்பகலில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மதுரை ராவ் சாகேப் நடேசய்யரவர்கள் என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் கும்பகோணம் வக்கீல்கள் எம். கே. வைத்தியநாதய்யர், எஸ். மஹாலிங்கய்யர், தேவக்கோட்டை வக்கீல் எஸ். சுப்பிரமணிய அய்யர் நாகஸ்வாமி அய்யர், அழ. சுப. சுப்பிரமணியன் செட்டியார், மெ. செ. ச. சிதம்பர செட்டியார் வயிநாகரம் சோமசுந்தரஞ் செட்டியார், முத்த. மெ. சொக்கலிங்கஞ்செட்டியார், எஸ். ரெகுநாதய்யங்கார் முதலான தலைவர்களும் ஸ்திரீரத்தினங்களான மதுரை செல்லம்மாள், மீனாக்ஷி அம்மாள், சேஷம்மாள், குப்பம்மாள், முதலானோர்களும் மற்றும் பல அன்பர்களும் தீர்மானங்கள் பிரேரேபணை செய்து ஆமோதிக்கும் வேளையில் உணர்ச்சி ததும்பும் முறையில் சொற்பொழிவாற்றினார்கள். அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர் மதுரை ராவ்சாகேப் நடேசய்யரவர்களிடம் வரவேற்புக் கழகத் தலைவர் ஸ்ரீ க. வி. சொ. வி. அழகப்ப செட்டியாரவர்கள் நன்கொடையாக ரூ 101 (நூற்றி ஒன்று) கொடுத்தார்கள் ஆத்தங்குடி ஸ்ரீமான் சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள் நன்கொடை கொடுத்த வள்ளலைப் பாராட்டி உணர்ச்சி ததும்பும் மொழிகள் பகர்ந்தார்.

தற்கால நிலையை விளக்கி நாம் செய்ய வேண்டிய வேலையைக் குறித்து மாபெரும் தலைவர் ஸ்ரீ என். நடேசய்யரவர்கள் செய்த பிரசங்கமும், ஸ்திரீ ரத்தினங்களின் உணர்ச்சிமிக்க பிரசங்கமும் மஹாநாட்டில் புத்துணர்ச்சியை உண்டுபண்ணிற்று. மஹாநாட்டுக்காரியதரிசி ஸ்ரீமான் சே. வு. மெ. மெய்யப்ப செட்டியார் சிறந்தமுறையில் வந்தன உபசாரம் கூறினார். எல்லா வகையாலும் மஹாநாடு வெற்றிகரமாக இரவு 9 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

வரவேற்புக் கழகத் தலைவர் திருவண்ணாமலை, திருக்களர், சிவபுரி தேவஸ்தான தர்மகர்த்தா

கோட்டையூர் ஸ்ரீமான் க. வீ. சோ. வீ. அழகப்ப செட்டியார் அவர்களின் வரவேற்புரை.

மஹா சபையோர்களே! இம்மஹாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் பெரியோர்களே! வருக, வருக. உங்கள் வரவு நல்வரவாகுக.

வேதநெறி தழைத்தோங்க, பல்லாண்டுகளாகச் சிறப்புடன் பல தர்மங்கள் நடத்தி வரும் பெரு மக்களாகிய தனவணிக மரபினரான இவ்வூர் நகரத்தார்கள் சிவாலயத் திருப்பணி செய்து மஹா கும்பாபிஷேகம் நடத்துவதற்கு முதல் நாளாகிய இன்று இச்சபை கூட்டப்பெறுவது மிக்க பொருத்தமுடையதே. காரைக்குடி சிவநேசச் செல்வர் நெறிமுறை தவறு நேர்மையாளர் ஸ்ரீமான் மெ. செ. ச. சிதம்பரம் செட்டியாரவர்கள் கொடி யேற்றுபவராகவும், ஆரியமும், செந்தமிழும் புலமை பூண்ட தேவகோட்டை ஸ்ரீமான் அள. சுப. பழ. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் விழா திறப்பாளராகவும், கல்வி கேள்வியிற் கற்றுத்தெளிந்த பெரியார் தேவகோட்டை ஸ்ரீமான் கரு கி. சொர்ணநாதன் செட்டியாரவர்கள் மஹாநாட்டுத் தலைவராகவும் அமைந்தது நமது பாக்கியமே. நமது குருஸ்தானம் கோவிலூர் ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகரவர்களின் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மஹாதேவ ஞான தேசிகரவர்கள் ஸாதுக்களுடன் ஈண்டு விஜயம் செய்திருப்பது நமது பூர்வ புண்ய பலனே. அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர் ஆஸ்திக திலகம் மதுரை ராவ்சாகேப் என். நடேசய்யரவர்கள் பி. ஏ., பி. எல்., நாலா பக்கங்களிலிருந்தும் வந்துள்ள பெரியார்கள், தனவணிக பெருமக்கள் முதலான நாட்டு மக்கள் பலர் இவ்விடம் விஜயம் செய்திருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

இதுசமயம் இந்த மஹாசபையை நடத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தற்சமயம் குறுகிய நோக்கத்துடன் கூடிய தவறான ஆராய்ச்சிகளாலும் சமய போதமில்லாத தற்கால கல்வி முறையாலும், கண்டதே காக்ஷி கொண்டதே கொள்கை என்ற உலோகாயதக் கொள்கையாலும், போதுமான மதப் பிரசாரமின்மையாலும், இக்காட்டிற்கு ஒவ்வாத அரசியல் முறையாலும், நம் பாரத தேசம், சமூகம், மதம், அரசியல் முதலிய எல்லா வழிகளிலும் சீர்குலைந்துள்ளது. புனிதமான கர்மானுஷ்டானங்களையும் பல நூறுண்டுகளின் அநுபவத்தைக் கொண்டுள்ள சமுதாயச் சட்டங்களையும் எவற்றினும் மேலான சமய நெறியையும் வேரறக் களையத்தக்க முறையில் சீர்திருத்தத்தின் பெயரால் செயல் புரியப்பட்டு வருகின்றது.

தொன்றுதொட்டு இருந்துவரும் ஸ்திரமான ஜாதி முறைமை என்னும் சமுதாயக் கட்டுப்பாடு, கலை, வீரம், வாணிபம், வேளாண்மை மற்றும் பல உபதொழில்கள் அபிவிருத்தி அடையக் காரணமாயுள்ளது. ஒவ்வொரு ஜாதியும் பொதுவில் எல்லோருடைய சௌகர்யத்திற்காகவே தொழில் செய்கின்றது. எல்லோரும் எல்லாத் தொழிலையும் செய்வது என்றுமியலாத காரியம். ஸ்திரமற்ற தொழில்முறை நாட்டின் வளர்ச்சியைத் தடை செய்யும். பூர்வ சென்ம புண்ணிய பாபங்களுக்கேற்ப மனிதன் இறைவனால் சிருஷ்டிக்கப்படுகிறான். அதனை அடிப்படையாகக் கொண்டது வர்ணம். இந்திரிய நிக்ரஹத்துடன் தகுந்த குருவினிடம் ஆத்ம வித்தை பயிலல், தகுந்த காரிகையை மணந்து இல்வாழ்க்கை புரிதல், முதிர்ந்த பருவத்தில் இல்லாளுடன் தவ வாழ்க்கை பூணுதல், கடைசியாக அனைத்தையும் துறந்து ஆத்மானந்தத்தை நாடிப் பேரின்பமடைதல், இவை தாம் வாழ்க்கையின் அங்கங்கள். இந்த வர்ணாச்ரம தர்ம முறை சமுதாய முன்னேற்றம், ஆன்ம அபிவிருத்தி இரண்டிற்கும் காரணமாயுள்ளது. ஆத்ம ஞானமடைந்த நிலையில் எவ்வித பேதமுமில்லை. அந்நிலை அடையும் வரை சில கட்டுப்பாடுகள் வேண்டிதவசியம். அவைகள் மாந்தர்களின் நலத்தின் பொருட்டேயாம்.

உலகில் ஜீவர்களின் சுபாவங்கள் எண்ணங்கள், குணங்கள் பலவாயிருக்கின்றன. அது உலக இயல்பு. மானிடவர்க்கத்தின் சுகாபிவிருத்திக்குக் கிரமமாயும் ஸ்திரமாயுமுள்ள வழியே நமது சாஸ்திரங்கள் உணர்த்துகின்றன. ஆசார அநுஷ்டானங்களும் சித்த சுத்திக்கு ஏற்பட்டவைகள். சித்த சுத்தி தெய்வ பக்திக்கு இன்றியமையாதது. பக்தி முக்திக்குப் பூர்வாங்கம். படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் பஞ்ச கிருத்யங்களையுடைய ஒரே ஸர்வேஸ்வரனை எந்த ரூபத்திலும், எப்பெயருடனும் எவ்விதம் வழிபடினும் அவர் இவனருளுக்கு உரியவர் என்பது நமது மதத்தின் பரந்த கொள்கை. சைவம், வைணவம், சாக்தம், ஸௌரம், காணபத்யம், காபாலிகம் முதலான ஸநாதன தர்ம உட்பிரிவுகள் லக்ஷியத்தில் ஒன்றே. எத்துறையிற் சென்றாலும் குளத்தின் நீர் அருந்தக்கூடுவதுபோல் எம்மார்க்கத்தை ஒருவர் கொள்ளினும் ஈசனருள் அவருக்குச் சித்திக்கும்.

வேதாகம சாஸ்திர முறைப்படி நிர்மாணம் செய்யப் பெற்ற தேவாலயங்களில் முறைப்படி தொன்றுதொட்டு வழிபாடு செய்துவந்த நமது மூதாதையோர் நன்கு வாழ்ந்து வந்தனர். சமுதாய ஐக்ய பத்யத்திற்கும் யாதொரு குறைவும் ஏற்படாதிருந்து வந்தது. சமீப காலத்தில் அவ்வாழ்

(தொடர்ச்சி 6-பக்கம் பார்க்க)

குறிப்பு:—மஹாநாட்டைத் தன் சொந்தச் செலவில் அரியமுறையில் நடத்த முன்வந்த பெரியார் ஆஸ்திகத் திலகம் கோட்டையூர் ஸ்ரீமான் க. வி. சொ. வி. அழகப்ப செட்டியாரவர்களை ஸநாதனதர்ம உலகம் என்றும் மறக்கமுடியாது. அப் பெரியார் நீடூழி வாழ்க.

ஆத்தங்குடி, காரைக்குடி, கோவிலூர் சபையார்கள் இரவுபகலாய் மஹாநாட்டை நடத்த ஆற்றிய அரிய தொண்டும், மதுரைத் தொண்டர்கள் செய்த சேவையும் மஹாநாடு எல்லாவழிகளிலும் சிறப்புடன் இனிது நிறைவேறக் காரணமாயிருந்தது என்றால் மிகையாகாது. சுருங்கச்சொல்லில் இம்மஹாநாடு முக்கியமாய் செட்டிமார் நாட்டில் புத்துணர்ச்சியை உண்டுபண்ணிற்று.

21—1—40ல் கோட்டையூர் மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் ஆலய மஹாகும்பாபிஷேகம் மிக்கச் சிறப்பாக நடைபெற்றது. சிவநேசத் திருக்கூட்டத்தார் மூன்று நாள் சைவசமயப் பிரசாரம் அரிய பிரசங்கவாயிலாகச்செய்தனர். மதுரை ராவ்சாகேப் என். நடேசய்யரவர்கள் ஸ்ரீ என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் சிவநேசர் கூட்டத்தில் 21-1-40 மாலை அரிய பிரசங்கம் செய்தனர். நமது நிருபர்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— டாக்டர் T. S. சவுரிராஜன் L. D, SC. ஆயிகுளம்ரோட் கும்பகோணம்

வர்ணாச்ரம தர்ம ஆலய ஸம்ரக்ஷண விசேஷ மஹா நாடு.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

க்கைக்கு ஊறு ஏற்பட்டுள்ளது. வேதாகம சாஸ்திரங்களுக்கும், பல நூற்றாண்டுகளாக நடைபெற்றுவந்தகோட்பாடுகளுக்கும் முரணாகவும் மதுரை ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சூழ்ச்சியாக காங்கிரஸ் மந்திரி சபை ஆதரவில் 8—7—1939ல் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் நடைபெற்றதும் அதில் சம்பந்தப்பட்டவர்களைப் பாதுகாக்க அவசரச் சட்டம் இயற்றி ஆலயப் பிரவேச அநுமதிச் சட்டம் ஆக்கப்பட்டதும் மதுரை தேவாலய சூப்பிரண்டெண்ட் ஸ்ரீபிரசாத ராவ் அவர்கள் காங்கிரஸ் மந்திரி சபையின் தன்மையை வெளிப்படுத்தி தனது பதவியை ராஜிநாமா செய்ததும் அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர் மதுரை ஸ்ரீமான் நடேசய்யர் முதலான ஸ்திரீ பூமான்களின் அரிய சேவையால் நாடெங்கும் ஆஸ்திகர்கள் செய்துவரும் கிளர்ச்சியையும் எவரே அறியார்!

கராச்சி காங்கிரஸில் நிர்ணயம் செய்யப்பட்ட ஜீவாதார உரிமைகளில் மத பாதுகாப்பு, மதத்தில் அரசாங்கம் நடு நிலைமை வகித்தல் முக்கியமானவைகள். அதற்கு முரணாகவும், சென்ற எலெக்ஷன் காலத்தில் மாஜி பிரதம மந்திரி, ஸ்ரீ ராஜகோபாலாசாரியார், டாக்டர் ராஜன் முதலானோர் தீண்டாதார் ஆலயப்பிரவேச விஷயமாய் சட்டம் செய்ய முற்படப்போவதில்லை என்று சொன்ன உறுதிமொழிக்கு விரோதமாகவும், மதுரையில் தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தை சூழ்ச்சிகரமாக நடத்தி பொதுஜன சம்மதி இருப்பதுபோல் விளம்பரம் செய்து கக்ஷி பலத்தைக்கொண்டு சட்டசபையில் துரிதமாக சட்டமியற்றியது என்ன நேர்மை? சத்தியம் அஹிம்ஸையின் போக்கு நன்றாகயிருக்கின்றது!

சட்டம் ஆனதுபற்றிக்கவலைப்படவேண்டியதில்லை. வங்காளப் பிரிவினைச் சட்டம் மஹாஜனங்களின் கிளர்ச்சியால் ரத்து செய்யப்படவில்லையா? வேண்டுவது தீவிரக் கிளர்ச்சியே. சலியாது உழைமின்! கிராமங்கள் தோறும் கிளைச் சங்கங்கள் அமையுங்கள். பிரசங்க வாயிலாக உண்மையைப் பொது ஜனங்களுக்கு உணர்த்துங்கள்.

நமது தனவணிக சமூகத்தினர்களுக்கு ஓர் வேண்டுகோள். நமது முன்னோர் ஆலயத் திருப்பணி, வேதாகம பாடசாலை, பசுமடம், அன்ன சத்திரம், திருக்குளம், நந்தவனம், தண்ணீர்ப்பந்தல் முதலான சிறந்த தர்மங்கள் புரிந்து நிறைந்த செல்வமும் பெற்று விளங்கினர். பல பெரியார்கள் இன்றும் அம்முறை வழுவாது அறம் புரிந்து வருவது அனைவரும் அறிந்த விஷயம் மற்ற சமூகத்தவரைவிட வேதநெறி தழைத்தோங்க செயல் புரிய வேண்டிய கடமை நமது சமூகத்தவருக்கு மிகுதியாக இருக்கின்றது. நம் இளைஞர்கள் நமது பண்டைப் பெரியோர் அநுஷ்டித்துவந்த முறைப்படி தர்மமார்க்கத்தைக் கைக்கொண்டு நடத்தி சகல சம்பத்துகளையும் பெறும்படி வேண்டுகிறேன். எல்லாம்வல்ல இறைவன் இம்மஹாநாடு சகலவழிகளிலும் வெற்றியுடன் இனிது நடைபெற்று தர்மம் தழைத்தோங்க திருவருள் புரிவாராக.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அர நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

ஸ்ரீ கரு. கி. சொர்னநாதன் செட்டியாரவர்கள் தலைமை உரை.

அன்புநிறைந்த பெரியோர்களே,

இன்று இவண் நடைபெறுகின்ற வர்ணாச்ரம தர்ம ஆலய சம்ரக்ஷண விசேஷ மகாநாட்டிற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி கட்டளையிட்ட மகாநாட்டுச் சபையோர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம்.

2. இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி எனக்கு கிடைத்தது எனதுபெரும் பாக்கியமே. நான் அறிவிலும் ஆண்டிலும் சிறியேன், என்னை தலைமை வகிக்கும்படி, மகாநாடு செய்தது என்பாலுள்ள அன்பின் பெருக்கேயாகும். அது என்ன காரணமென்று யோஜிக்கும்போது மகாநாடு கூடும் நகர் கோட்டையூர். நான் வசிக்கின்ற ஊரும் தேவகோட்டை. ஆனதால், கோட்டையினுடைய சம்மந்தம் பற்றி என்னைத் தலைமை வகிக்கும்படி செய்திருக்கலாம் என்று நினைக்கிறேன். இப்பெரிய மகாநாட்டில் தலைமை வகித்துப் பேசுவது ரொம்ப அரிது. சபையோர்கள் கடாக்ஷ வீக்ஷண்யத்தால் நான் பேச ஆரம்பிக்கின்றேன். இதில் உள்ள குற்றத்தை தள்ளி குணத்தைக் கிரகிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

3. வர்ணாச்ரம தர்மம் ஒன்று: ஆலய சம்ரக்ஷணம் இரண்டு. இந்த இரண்டு தர்மமும் இம்மகாநாட்டிற்கு நேத்ரம் போல் உளது. ஆனதால் முற்காலத்தில் சேர சோழ பாண்டிய ராஜாக்களும் இன்னும் மற்றும்உள்ள சிற்றரசர்களும், மடாதிபதிகளும், பெரியோர்களும். சிவாலய விஷ்ணு ஆலயங்களைச் சிற்ப சாஸ்திரபடி கருங்கற்பணிகள் செங்கற்பணிகள் செய்து அதில் மூர்த்திகளை ஆகம சாஸ்திர விதிபடி பிரதிஷ்டை செய்து, நித்திய நைமித்தியங்கள் நடத்தி, அதற்கு போதுமான விளைநிலங்கள் மூலதனமாக வைத்தும், ஆபரணம் வாகனங்கள் செய்து வைத்தும் விமரிசையாய் நடத்தி வந்தார்கள். அவைகளில், இப்பொழுது சிலமாயுள்ள திருப்பணிகளை, நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பெரும் பணம் செலவு செய்து ஜீர்ணோத்தாரணம் செய்து மஹாசாந்தி என்னும் கும்பாபிஷேகங்கள் மிகச் சிறப்பாக ஆகம சாஸ்திர விதிப்படி நடத்தி வருகிறார்கள். மேலும் சமயாசாரிய மூர்த்திகளால் பாடல்பெற்ற க்ஷேத்திரங்களில் மிக்க ஆர்வத்தோடு திருப்பணிகள் நடத்தி கும்பாபிஷேகம் செய்தும் பாடல்கள்பெற்ற க்ஷேத்திரங்களிலும், வைப்பு க்ஷேத்திரங்களிலும், புராதன க்ஷேத்திரங்களிலும் தாங்கள் வசிக்கின்ற நகரங்களிலும் நந்தவனம், பசுமடம், வேதபாடசாலை, ஆகம பாடசாலை, தேவார பாடசாலை, சாஸ்திர பாடசாலை, குருபூஜை மடம், சத்திரம், சாதுக்கள் மடம், தடாகம் தண்ணீர்ப்பந்தல் முதலிய பல தர்மங்களையும் நடத்திவருகிறார்கள். இவையெல்லாம் சாஸ்திர வரம்புக்குட்பட்டு நாம் செய்யும் தர்ம காரியங்கள் ஆகும்.

இப்பொழுது கொஞ்ச காலமாக, ஆலயங்களினுள் தீண்டாதார் பிரவேசிக்க வேணுமென்று ஆலய மசோதாக்கள் காங்கிரஸ் சபையோர்களால் கொண்டு வந்து, அதை சட்ட சபையில் ஆமோதித்து இருப்பது நமது காக்ஷிமை தங்கிய மஹாராணி அவர்கள் மத விஷயத்தில் பிரவேசிக்கிறதில்லையென்று உறுதி செய்து சிம்மாசனத்தில் வீற்றிருந்து சொல்லிய வாக்குக்கு விரோதமாகும். அதை காப்பாற்ற வேண்டுவது நமது கனம் பொருந்திய மஹாராணி வழித்தோன்றலாகிய சக்கிரவர்த்தியினுடைய கடமையாம். பிரமஸ்ரீ மதுரை ஸநாதன தர்ம பரிபாலன நடேசய்யர் அவர்களும், அனேகம் பெரியோர்களும் சட்ட நிபுணர்களும் நமது சென்னை கனம் கவர்னர் அவர்களிடம் இது விஷயமாகத் தூது போய் விண்ணப் பித்ததில் அதற்கு சரியான நியாயம் கிடைக்க வில்லை. மேலும் ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் சமேத சோமசுந்தரக் கடவுள் அறுபத்து நான்கு திருவிளையாடல் செய்த துவாதசாந்த மகா க்ஷேத்திரமாகிய ஆலவாய் என்னும் மதுரை க்ஷேத்திரத்தில் நாளது ஆடிமீ ஜுலை 8உ கபடமாய் காங்கிரஸ் தலைவர்களின் உயர்தர உத்யோகம் பெற்றவர்கள் தீண்டாதார்களை வழக்கத்துக்கு விரோதமாக ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரக் கடவுள் ஆலயத்துக்குள் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். அதனால் மதுரைமாநகரில் அனேகர் ஆலயத்துக்குள் சுவாமி தெரிசனத்துக்கு போகாமல் கும்பாபிஷேகம் செய்துதான் சுவாமி தரிசனம் செய்ய வேணுமென்று நினைத்து வருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

நமது காங்கிரஸ் சபை தலைவர்கள் சக்கிரவர்த்தினி வாக்கை காப்பாற்றி ஆலயத்துக்குள் தீண்டாதாரை வழக்கத்துக்கு விரோதமாக அழைத்துக் கொண்டு போகாதிருந்தால்,அவர்கள்கொண்டகொள்கைக்கு இறைவன் கிருபை செய்வார். அப்படி இல்லாமல் அவர்கள் ஆலயத்துக்குள் தீண்டாதாரை அழைத்துக் கொண்டு போய் வந்தால் சநாதனிகள் கவலைப் படாமல் சும்மா இருக்க முடியுமா? இனி நாம் என்ன செய்ய வேண்டும்? நமது சமயத்துக்கு தக்க ஒழுக்கத்துடன் இருந்து சர்வேச்வரனை எல்லோரும் ஏகமனதாய் தியானித்தால் ஸ்ரீ ஞானசம்பந்தர் சமணரைவாதில் வென்றது போல், ஸ்ரீமீனாக்ஷி சமேத சோமசுந்தரக் கடவுள் அருளால் நாமும் வெற்றியைப் பெறுவோம் என்பது திண்ணம். நமது ஜீவன் முக்தி க்ஷேத்திரமாகிய வாரணாசி (காசி) க்ஷேத்திரத்திலும் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள், முகலாய அரசர்கள் செய்த இடஞ்சல்களை வாதில் வென்று விஸ்வநாதர் ஆலயத்தை புனருத் தாரணம் செய்ததும் சான்றாம். இம்முறையே நமது சனாதன தர்ம மதத்திற்கு இடஞ்சல் வருவதும் நாம் பூர்ண வெற்றி பெறுவதும் வழக்கமே. அதின்படி இப்பொழுதும்நேர்ந்திருக்கிறது இச்சமயத்தில் நமது சநாதனிகள் யோஜிக்காமல், ஊக்கமது கைவிடேல் என்னும் ஔவை பிராட்டியார் அருள்வாக்கியப்படி எல்லோரும் ஒற்றுமையோடு திடமாக இருந்து சமயப் பிரசாரங்கள் செய்து நமது காருண்ய கவர்மென்டாருக்கு விண்ணப்ப மூலம் தெரிவித்து தீண்டாதார் ஆலயப் பிரவேச மசோதாவை ரத்துச் செய்யும்படி செய்ய வேண்டியது ரொம்ப அவசியம். மேல் கண்ட ஆலய சம்ரக்ஷண தர்மம் சநாதனிகள் எல்லோருக்கும் பொதுவாய் இருந்த போதிலும்நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பெரும் பொருள் செலவிட்டு திருப்பணி செய்து ஆலயங்களை பரிபாலனம் செய்து வருவதால் நம்மவர்க்கு அதி முக்கியமாகும் தீண்டாதார் ஆலய பிரவேச சட்டத்தை ரத்துச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாகவும் திடமாகவும் நடத்தி வரும்படி நாமும் வேண்டிய ஏற்பாடுகள் செய்ய முன்வர வேண்டும். முயற்சிகள் வெற்றியுடன் பூர்த்தி பெற நாம் நமது ஸ்ரீ மீனாக்ஷி சமேத சோமசுந்தரக் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

காங்கிரஸ்ஸூம் ஸநாதநமும்

இவ்விரண்டும் ஆலயவிஷயத்தில் பரஸ்பர விருத்தங்களென்பது "தீண்டாதார் ஆலயப்பிரவேச'' விஷயத்திலிருந்து ஜகத்ப்ரஸித்தங்கள் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஆயினும் கோயிலில் காங்கிரஸ் ஆக்ஷி நடைபெற்று வருகிறது யாருமறிந்ததே. இதுவிஷயத்தில் ஆலயத்துள்ளிருக்கும் அர்ச்சாரூபியான பகவானுக்கு ஏற்பட்ட டைடில் என்னவென்பதை மட்டும் முதலில் ஆலோசிக்க வேண்டியது மிக்க அவசியமாயிருக்கிறது. அதை ஆராயுங்கால்.

1, ஸ்ரீரங்கநாதனுடைய அஷ்டோத்தரத்தின் நடுவே "மஹாவிஷ்ணு: ஸநாதந:'' என்றபடி நம் ரங்கனுக்கு "ஸநாதந:'' என்பது ஒரு திருநாமம்.

2, ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் மத்தியில் "ஸநாத்ஸநாதநதம:'' என்றபடி பகவானுக்கு "ஸநாதநதம:'' என்று ஒரு திருநாமம். இதற்கு ஸநாதநர்களுள் மிகச்சிறந்தவர் என்பது அர்த்தம்.

3, ஸஹஸ்ரநாம பலபிரகரணத்தில் "யாதி பிரம்ம ஸநாதனம்'' என்றபடி சாகப்பிறந்த ஒருவன் பகவானை ஆச்ரயித்து பகவானையே நோக்காகக் கொண்டால் ஸர்வ பாபத்திலிருந்தும் சுத்தனுகி "ஸநாதந'' மான பிரும்மத்தை அடைகிறுன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுலும் வாஸுதேவத்வாசாக்ஷர ப்ரதிபாத்யனுன நம் திருவரங்கன் "ஸநாதநப்ரும்மம்'' என்பது வியக்தமாயிற்று. வந்த ஸேவார்த்திகளின் க்ஷேமத்தின் பொருட்டு இவ்வஷ்டோத்ர ஸஹஸ்ரநாமங்களைச் செய்யப்பணத்தை வாங்கிக்கொண்டு காங்கிரஸ் ஆக்ஷிக்காரர்கள் பிரதிதிநம் சீட்டுக்கொடுத்து வருகிருர்கள். இன்னும் "ஏஷ தர்மஸ் ஸநாதந:'' "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்'' இப்படிப் பல இடங்களில் வியக்தம்.

இப்படிப்பட்ட பகவானை உபாஸித்து இவனுடைய தர்மங்களை அனுஷ்டிப்பவர்கள் தான் "ஸநாதநி'' களெனப்படுவார்கள் "ஸநாதநி''களென்ருல் "ஸநாதந''னுன பகவானைச் சேர்ந்தவர்களென்பது விளங்கவில்லையா? ஸநாதநனுன பகவானைக்கொண்டாடலாம், அவனுடைய திருநாமங்களைச் சொல்லலாம். அவனைச் சேர்ந்தவர்களான "ஸநாதநிகளும்'' வேலைக்கு வேண்டும். ஆனுல் ஸநாதநிகளென்று வெளிப்படையாய்ச்சொல்லிக் கொள்ளக்கூடாது. என்ருல் இந்த ஆக்ஷியின் கொள்கைதானென்ன?

தவிற இப்படிப்பட்ட பகவானிடத்தில் பக்தியதிசயித்த ஸநாதநிகளுக்காக நிரபராதிகளான ஜயவிஜயர்கள் கூடவல்லவா சாபக்ரஸ்தரானுர்கள்? அப்படிப்பட்ட ஸநகாதிகள் யாரென்ருல் ஸநத் ஸநத்ஸுஜாத : ச ஸநக : ச ஸநந்தந : | ஸநத்குமார : கபில : ஸப்தம : ச ஸநாதந : | என்றபடி இவ்வேழு பேர்களுமல்லவா? இவர்கள் முக்கிய ஸநாதநிகளல்லவா? இவர்களிடத்திலல்லவா பகவான் பக்ஷபாதியாயிருந்தது? இவர்கள் ஆலயாராதந விஷயங்கள் யாவையும் நன்கறிந்து பரமாசார்யர்களாகவும், ஸ்ரீ பகவத் சாஸ்திரத்தில் குறிப்பிட்டு இவர்களுக்கு பகவதாராதநாத் பூர்வம் பூஜையும் சொல்லப்பட்டு மந்திர பூர்வகமாக ப்ரதிதிநம் நடந்து வருகிறதென்பதை ஸவிநயம் தெரிவிப்பதுடன், இவர்களில் ஒருவரான " ஸநக ,, ரல்லவோ ஸ்ரீ பாஞ்சராத்திராசார்யர்களாகிய ஐவரில் ஸ்ரீ சாண்டில்ய, பகவானிடம் " ஸ்ரீ பாரமேசுவர ,, ஸம்ஹிதையை உபதேசம் பெற்று அத்யாபி இவ்வூர் அர்ச்சகர்களால் ப்ரகிருதங்களில் ஆலயத்தில் போற்றப்படுகிறதுடன் அவ்வாகம சாஸ்திர ரீதியாய் ஆராதிக்கப்பட்டும் வருகிறது.

இப்படிக்கெல்லாமிருக்க காங்கிரஸ்காரர்களான ஆலயாதிகாரிகளுக்கு ஸநாதநிகளிடத்தில் ஏன் ஒரு வெறுப்பும் சத்ருத்வமும் ஏற்படவேணும் என்பதை அவர்களே நன்ருய் ஆலோசிப்பதுமிக்கஅவசியமாகும்

ஏ. ரெங்கஸ்வாமி பட்டர்,
ஸ்ரீரங்கம் கோவில் பட்டாசாரியார்.

சங்கத்தமிழ்மாலை

உலகு என்பது உயர்ந்தோரைச்சுட்டும். சாது சனங்களே பெரியோர். அமலன் பொன்னடிக்கடவாது நிற்கும் பெற்றியரே அடியார். வருண நெறிச்செவ்வி வழுவாது நடப்பவரே சாதுக்களெனப் பெறும் வைஷ்ணவர்கள். "உலகங்கள் வாழவென்று சர்தமிகு தமிழ் மறையோன் தூப்புற்ருேன்றும் வேதாந்த குரு மொழிந்தது பிரபந்தசாரம்'' சாது சனம் வாழவென்று சாற்றிய நற் பிரபந்தசாரம் என்பது இதன் தனியன். வேயர் புகழ் வில்லிபுத்தூரில் திருவாடிப் பூரத்தன்று இச்சகத்துதித்தவள் கோதை. இவள் விட்டு சித்தன் திருமகள், இவ்விட்டு சித்தனே வாரண மேல் மதுரை வலம் வரமால் கருடவாகனனுய்த் தோன்ற அவருக்குத் திருப்பல்லாண்டு பாடியவர். பெரியாழ்வார் என்று கொண்டாடப்பெறுபவர் இவர்தான். இக்கோதை பல்பதியம் இன்னிசையால் திருவரங்கற்குப் பாடிக்கொடுத்தாள். பூமாலையைச் சூடிக்கொடுத்து சுடர்க்கொடியாய்த் திகழ்ந்தாள். இவளது பாமலை திருப்பாவையும் தையொருதிங்களும் இதில் திருப்பாவை பாட்டாறைந்து இதனை இவள் "சங்கத்தமிழ் மாலை'' என அருளுகின்ருள். ஆண்டாள் அருளிச்செய்ததாய், இப்பிரபந்தம், கோபகன்னிகைகள் திரள்திரளாகக் கூடி அநுபவித்ததாய் தமிழ்ப்பாமாலையாய் அமைந்துள்ளது "பிராட்டி ஆண்டாளானற் போலே, உபநிஷத்து தமிழானபடி'' என்பது பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த மூவாயிரப்படி. "சிலங்கவர்ந்திடுந் தேசிகர் தேசின் பெருமையினுல் தூலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன துஞ்சல் தரும், கோலங்கழிந்திடக்கூறிய காலங் குறித்து நின்ருேம், மேலிங்கு நாம் பிறவோம் வேலைவண்ணனை மேவுதுமே'' என்ற "தேசிகமாலை'' ப்பாசுரவிவரணத்தில் அவ்வாசிரியர் தாமே "தூலங்களென்ன துரிதங்கள் மாய்ந்தன– என்றது, போய பிழையும் புகுதருவானின்றனவும் தீயினிற்றூசாகும்' என்றும் உபநிஷத்துச்சொன்னபடியே உத்தர பூர்வாகங்கள் கழிந்தபடியைக் கணிசிக்கிறது'' என்று கூறுமாற்ருல் இம்முப்பது பாசுரங்களும் உபநிஷத்து எனக்கொளல் வேண்டும். இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும். சங்கம் என்றது சாதுசங்கம். சாதுப்பொருள் தொடக்கத்தில் கூறினேம். தமிழன் சாது. சாதுசங்கம் தமிழ்ச்சங்கம். "அவன் கையில் வளைபோலெம்மாசிரியர் வாக்கு'' என்பதால் தமிழொலி சங்கநாதமெனக்கொள்ளவுமமையும். அவன் முழக்குவது அஞ்சங்கே. இங்கு முழங்குவதும் சங்கத்தமிழே. பிராட்டி பாஷை தமிழ். அதனுற்ருன் திருப்பாவையும் "மா'' விற்ருெடங்கி "மாதவனை'', திருமாலால் எங்குந் "திருவருள் பெற்றின்புருவர்'' என நிகமநமாகி நிற்கின்றது. பாவநமான அளவன்றிக்கே போக்கியமாயும் எம்பெருமானும் தலையாலே சுமக்கவேண்டியதாகவும் ஆனபெருமிதம் தோன்றவே ஆண்டாள் திருப்பாவை "சங்கத்தமிழ் மாலை''யாகப் போற்றப்பெற்று வருகின்றது. இஃதொன்றே கீதோதயமான மார்கழித்திங்கள் முழுமையும் விடாது அநுஸந்திக்கப்பட்டு வருதல் காண்க. "திருப்பாவையென்னத் திருந்தியற்பாத்தந்த, திருப்பாவை வில்லிப்புத்தூர் செல்வியருட்பார்வை, வாய்ந்ததனுற் செய்யுள் வழக்கென்றிரண்டிடத்தா, லாய்ந்துரைப்பல் செய்யுளணி'' என்று கொண்டாடுவர் மாறனலங்காரவாசிரியர். திருப்பாவை வாழ்க. கோதை தமிழ் செழிக்க.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

வீண் வியாபாரம்

ஹிந்து மஹாஸபா, ஸந்தேஹத்திற்கு இடமே இன்றி விசதமாக விளக்கி விட்டது பூர்ண ஸ்வராஜ்யம் அடைந்த இந்தியாவில் எல்லா வகுப்புக்களுக்கும் ஸமமான [illegible]யதை உண்டு. சிறுபான்மையோர்[illegible]ருக்கும், ஹிந்துக்கள் சிறுபான்[illegible]ராக இருக்கும் இடங்களாயினும் [illegible] முஸல்மான்கள் சிறுபான்மையோராயினுமஸரியே யாவருக்கும் அவர்கள் உரிமையை பாதுகாக்கும் விஷயத்தில் ஒரே திட்டம் தான். இருவகுப்பினர்களும் சேர்ந்து ஒன்றுபட்டு ஓர் திட்டத்திற்கு ஒப்புக்கொண்டு தெரிவித்து விட்டால் ப்ரிடிஷ்ஸர்கார் தயக்கமின்றி நாம் கேட்கும் வாக்குறுதியை கொடுத்து விடுவதாகவும் நமது ஸ்வாதீனதையை ஒப்புக்கொண்டு விடுவதாகவும் கூறுகின்றனர். நாம் அப்படி ஒருமனதுபட்டு ஒப்புக்கொண்டு தீர்மானித்த திட்டம் தானே லக்னோ ஒப்பந்தம்? அதை முறித்து எறிந்து விட்டு அதிக அனுகூலங்கள் தங்களுக்கு வேண்டுமென்று நிர்பந்தித்தது யார்? எந்த வகுப்பினர்? ஒருமனது பட்டு தேசீய முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்ட திட்டம் நேரு ரிபோர்ட் அல்லவா? அதையும் அப்பொழுது ஒப்புக்கொண்டு விட்டு இப்பொழுது அது போதாதென்று கூச்சல் இடுபவர் யார்? ஸைமன் கமிஷனரும் ஓர் ஏற்பாட்டை ஸூசிப்பித்தார்களே அதை மறுத்தது யார்? வட்டமேஜை மஹாநாடு தீர்மானத்திற்கு வராமல் தத்தளித்த பொழுது, முஸ்லீம் வகுப்பினர்களுக்கு பூர்ணமாகத்ருப்தி அளிக்க பிரிடிஷ் ஸர்க்கார் ஓர் முடிவு செய்தார்களே அது மிகவும் திருப்திகரமானது என்று அப்பொழுது முஸ்லீம்கள் கொண்டாடி வரவேற்றனரே அந்த முடிவையும் ரத்துசெய்து வேறு சலுகைகள் வேண்டுமென்று கூச்சலிட முஸ்லீம்களுக்கு இப்பொழுது என்ன பாத்யம்? வேறு ஓர் முடிவுக்கு வரவேண்டுமென்று நம்மை கேட்கத்தான் பிரிடிஷ் ஸர்காருக்கு என்ன பாத்யம்?

பாய்பரமானந்தர்.

சென்னை ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினி ஸபையாரால் பிரசுரிக்கப்பட்ட பிரசுரங்கள்.

ஸ்ரீ நாகர விமர்சனம்	0	12	0
குருதத்வ விமர்சனம்	0	5	0
வரிவஸ்யா ரகஸ்யம்	1	0	0
வித்யாசபர்யா பத்ததி	2	0	0
ஞானப்ரகாசம்	0	10	0
மனீஷா பஞ்சகம்	0	5	0
ஸ்ரீ லலிதா த்ரிசதி பாஷ்யம்	1	0	0

கிடைக்குமிடம்.– ஸ்ரீ ஜனுர்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்,

வெளியூர் செய்திகள்

டைமருதூர்:- பிரதி வருஷத்தி ஸபுஷ்ய உத்ஸவத்தில் நடைபெ ஸாமவேத பாராயண கோஷ்டி ண போஜனுதிகளும் இவ்வரு ஸம் 3உ முதல் 12உ முடிய ப்பாக ஸ்ரீவேதமூர்த்தி ராமஸ்வா ாதிகள், நாராயணஸ்வாமிசிரெதிகள் முதலியவர்களின் முயற்சியால் நடைபெற்றது.

பம்பாய்

ஸ்ரீ சங்கரமடத்தில்
பிரஸங்கம்

பம்பாய் மாதுங்காவிலுள்ள ஸ்ரீ சங்கர மடத்தில் ஸ்வாமி ஸ்ரீ விமலானந்த தீர்த்தஜி மஹாராஜ் அவர்கள் ஜனவரி 7உ யன்று ஸ்ரீபகவத் கீதையைப் பற்றி ஓர் பிரஸங்கம் செய்தார்கள். பகவான், கீதா என்ற பதங்களின் பொருள்களை ஸ்ரீ ஸ்வாமிஜி முதலில் விவரித்துக் கூறினார்கள். மேலும் இன்று நம் தேசத்தில் தோன்றியுள்ள ஸகல கஷ்டங்களுக்கும் கீதையில் பரிஹாரமிருப்பதாயும் ஸ்வாமிஜி நிருபித்தது ஸபையோர்களின் மனதைப் பரவசமாக்கியது கௌடபாதருடையமாண்டுக்ய உபநிஷதகாரிகைகளை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீஸ்வாமிஜி பேசினார்.

உபந்யாஸஆரம்பத்தில் திருச்சி ஸ்ரீமான் நராயண அய்யரவர்கள் ஸ்ரீ ஆதிசங்கரா பகவத்பாதாசார்யாளைப் பற்றியும், தற்பேதைய பீடாதிபதிகளான ஸ்ரீஆசார்யாளைப் பற்றியும் புகழ்ந்துபேசி அவாளுடைய அநுக்கிரகத்தினலேயே பம்பாயில் ஸ்ரீ சங்கரமடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாயும் குறிப்பிட்டார். ஸ்ரீஆச்சார்யாள் ஒரு ஸ்ரீமுகம் அனுப்பியிருந்தார்கள்.

திருச்சி
ருக்மணீ கல்யாணம்

திருச்சி சின்னக்கடை வீதி மூலப்பிள்ளையார் கோவிலில் பல வருஷங்களாக பிரும்மஸ்ரீ. வித்வந்மணி திருவையார் ஸ்வாமி சாஸ்திரிகளால் ப்ரவசனம் செய்யப்பட்டு வரும் பாகவத ப்ரவசனத்தில் 14-1-40 ஞாயிறு அன்று ருக்மணீ கல்யாண கட்டம் வெகு விமர்சையாய் நடைபெற்றது. பலர் ச்ரவணம் செய்யும் பாக்யம் பெற்றனர். பல ஆண்டுகளாக புராணப்ரவசனம் செய்வதன் மூலம் நமது தர்மத்தைக் கார்ப்பது நமதுபாக்யமே. பெரியோர்வாழ்க தர்மம் வாழ்க. (ந. வி. நி.)

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்.)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
ஸ்ரீ ஜனர்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

திருவாடானை
கதாகாலக்ஷேபம்

1938-ம் வருஷம் ஜூலை மீ 14 உ முதல் திருவாடானை கு. ம. வேதபாடசாலையில் ஆஸ்திகர்களின் ஆதரவில் சி. வ. ஆணிமுத்துச்செட்டியாரவர்கள் உதவியின் பேரில் ராமஸ்வாமி அய்யங்காரவர்களால் பிரதி தினமும் இரவு 9 மணி முதல் 11 மணி வரையில் ஸ்ரீ மஹாபாரதம் 18 பர்வங்களும் முறையே உபன்யஸிக்கப்பட்டு மஹோத்ஸவம் பூர்த்தியாகி, பின்பு ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஸப்தகாண்டங்களும் உபன்யாஸம் செய்யப்பட்டு பட்டாபிஷேகம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு 12-9-39 முதல் ஸ்ரீஸ்காந்த புராணம் தொடர்ந்து நடைபெற்று வருவதில் நாளது தை மீ 9உக்குச் சரியான 22-1-40 தேதி திங்கட்கிழமை யன்று இரவு 9 மணிக்கு ஸ்ரீ வள்ளியம்மையாரின் திருக்கல்யாண மகோஸவ கட்டம் அதிவிமர்சையாய் நடந்தது.

வே. கணபதி கனபாடிகள்.

மேலக்காவேரி

மேலக்காவேரி ஸ்ரீகைலாயநாதர் ஆலயத்தில் தனுர்மாஸபூஜை இவ்வாண்டு வெகு விமர்சையாய் நடைபெற்றது. ஆலயநிர்வாஹி ஒவ்வொரு நாளும் பூஜாகாலங்களில் தவருமல் கூட இருந்து சகலகார்யங்களையும் நேரில் கவனித்து நடத்தியது மிகவும் பாராட்டத்தக்கதே, கிராமவாசிகள் ஒவ்வொருவரும் முன்வந்து மண்டகப்படிகளை சிரத்தையாய் நடத்தி உதவினார்கள். அதற்கு அவர்கள் மிகவும் பாராட்டப் படுகிறார்கள் ஷை ஆலயத்திற்கு வருமானம் வரும்வழிகளுள் பல அல்லல்கள் இருப்பதாய் காணப் படுகிறது. டிரஸ்டி அவர்கள் அதை கவனித்து நியாயமாமான வழிகளில் வருமானங்களைப் பெருக்கி அதன் மூலம் விசேஷ அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டுமென வேண்டுகிறோம்,

(ந. வி. நி.)

மேல மாம்பலம்
ஸ்ரீ ராதாகல்யாணம்.

தநுர்மாஸமெலாம் அதிகாலையிலெழுந்து பஜனையுடன் கிரிப்ரதக்ஷிணம் வந்த கோஷ்டியார் மகா-ஸ்ரீ ப. வைத்யநாதய்யர் வீட்டில் பிரும்மஸ்ரீ ராமசந்த்ரஹரிஹரியின் தலைமையில் ஷை உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தினர், பண்டித ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா பண்டித அப்பு சாஸ்திரிகள் முதலிய பல பெரியோர்கள் வந்திருந்தனர். சாஸ்த்ரப்படி அஷ்டபதிகளைப்பாடி உத்ஸவத்தை மிகச் சிறப்பாக நடத்தினர். ஸ்ரீமான் அய்யரவர்கள் பக்தர்களை வரவேற்று ஆதித்யஞ் செய்தமுறை மிகச்சிறந்ததாயிருந்தது. ஸ்ரீ ஹரிஹரியின் உபன்யாஸமும் ஸ்ரீ ராமசந்தரய்யர் செய்த பித்ரு மாத்ரு குருபூஜையும் மிகமிக கொண்டாடத்தக்கது. ந-நி.

வேம்பத்தூர் பேராசிரியரான பிர்மஸ்ரீ முத்துகிருஷ்ண சாஸ்திரிகள் தமது 62வயதில் நாளது பிரமாதி வருஷம் தைமாஸம் சுக்லஷஷ்டி ஸோமவார தினத்தில் சித்தி பெற்ற தன்மையை சாதுக்கள் யாவரும் அடுயத்தக்கது.

1939 டிஸம்பர் மாதத்தில் பிரிட்டன் தேசத்து ரோடுகளில் மோட்டார்கார்களால் அடிபட்டு 1155 பேர்கள் கொல்லப் பட்டார்கள்.

"The Moslims are, therefore, a religious group like Hindus, Jains, Sikhs, Christians, etc., as such they can with justice claim safeguards for the protection of their religion, culture, language, scrip and even their personal law."

J. B. Kripalani,
General Secretary of the Congress.
[Hindu, 16-1-40, page 5.]

BOOK REVIEW

"The Hindu Heritage" Bombay 19, An English Monthly. Annual Subscription Rs. 2/—

We are in receipt of the first issue of this valuable journal. The journal sets before itself to "champion all honest and genuine causes that promote human welfare and criticise without fear or favour all forms of obsolete and effete customs and religious observances that have no sanction of the scriptures behind them." It also endeavours to interpret the Hindu sastras in terms of modern science and show that they are not antiquated notions, but the fruits of age long experience of men and matters over a variety of conditions and territories. This is a bold undertaking which requires as much scholarship as delicacy and discretion. We hope the journal will be able to fulfil in a remarkable measure the objects it has set before itself. The translation from original unpublished works is a very welcome feature. K. V.

ஸ்ரீ பச்சையப்ப கலாசாலையின் ஸம்ஸ்கிருத நாடகம்

சென்னை ஸ்ரீ பச்சையப்ப கலாசாலையின் ஸம்ஸ்கிருத வித்யார்த்திகள் மஹாகவி ஸ்ரீ காளிதாஸனின் "விக்ரமோர்வசீய" நாடகத்தை 20—1—1940 சனிக்கிழமை யன்று மைலாப்பூர் சுந்தரேச்வரர் ஹாலில் நடித்தார்கள். பிரபுக்களும் மகாவித்வான்களும் விஜயம் செய்து நாடக நடிப்பை மிகவும் கொண்டாடினார்கள். ஸ்ரீ லாட் கோவிந்த தாஸ் அக்ராஸனம் வகித்து ஒரு சிறந்த பிரஸங்கம் செய்து சபையை அலங்கரித்தார்கள். விக்ரமோர்வசீயம் நடிப்பதற்கு அஸாத்யம் என்று நடிக்கப்படுவதே கிடையாது. ஆயினும் கலாசாலை பண்டிதர்கள் நாடகத்தைத் தகுந்தபடி மாற்றி நாடக மேடைக்கேற்றவாறு செய்திருக்கிறார்கள். முக்யமாக, இந்திர ஸபையில் "லக்ஷ்மீ ஸ்வயம்வரம்" என்னும் ஒரு நாடகம் நடிக்கப் படுவதாகவும், அதில் லக்ஷ்மியாக நடிக்கும் ஊர்வசியானவள் தவருக புரூரவஸின் பெயரைக்கூறுவதும், இந்தத்தவறுக்காக பரதமுனியால் சபிக்கப்பட்டு பூலோகத்தை யடைவதாகவும், ஒரு தகுந்த அங்கம் புகுத்தப்பட்டு அந்தர்நாடிகையாக கணிக்கப்பட்டது. இந்த அந்தர்நாடிகையைக்கண்ணுற்ற வித்வான்கள் மிகவும் மெச்சி, கவனமும் ஸம்பாஷணைகளும் ஸ்ரீ காளிதாஸன் எழுதியதுபோலவே யிருக்கின்றன வென்று சொல்லி இந்த அங்கத்தை எழுதிய கலாசாலைப் பண்டிதர்களை மிகவும் கொண்டாடினார்கள். நான்காவதங்கம் தகுந்தபடியமைக்கப்பட்டிருக்கிறது. வித்யார்த்திகள் நடித்தது சங்கீதத்திலும் அபிநயத்திலும் உயர்தரமாகவேயிருந்தது. இந்த நாடகத்தைதகுந்தபடியமைத்து நடிகர்களை பழக்கியதின் பெருமை வித்வான்கள் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் ஷண்முக முதலியார், ஸ்ரீநிவாஸாச்சாரியார் இம்மூவரைச்சேரும். நாடக முடிவில் ஸ்ரீ லாட் கோவிந்ததாஸ் அவர்களால் தகுந்த பரிசுகள் நடிகர்களுக்கு அளிக்கப்பட்டன.

ஓ. நி.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram,